**இலங்கை கெனோயிங் மற்றும் காயக்கின் சங்கம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

இலங்கை கெனோயிங் மற்றும் காயக்கின் சங்கத்தின் (''சங்கம்'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் வருமான செலவுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்றை வெளியிடவில்லை. எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சங்கத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சங்கத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சங்கம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சங்கத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சங்கத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

சம்மேளனத்தின் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்வதும் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதும் எனது பொறுப்பாகும். இருந்த போதிலும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத ஆவணச் சான்றுகள்

| | விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | வருமானம் | 1,203,394 | பற்றுச்சீட்டுக்கள் | சங்கத்தின் கருத்துரை சமர்ப்பிக்கப்பட வில்லை. | வருமானம், செலவுகள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்துவ தற்கான போதியளவு ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செலவுகள் | 2,173,171 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் | மேற்படி | |
| (இ) | வங்கி | 675,493 | வங்கி இணக்கக்கூற்று மற்றும் உறுதிப்படுத்தல்கள் | மேற்படி | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐந்தாவது கேனோயிங் ஸ்பிரிங் நேஷனல் சாம்பியன்ஷிப் ரெகாட்டா 2021 இற்கு 2021 மே ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் ரூபா 183,000 மீளாய்வாண்டின் செலவீனமாக கணக்கிடப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை அதே அளவு அதிகரிக்கப்பட்டிருந்தது. | 2021 இல் மேற்கொள்ளப்பட்ட இந்நிகழ்விற்கான செலவுகள் 2022 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டன. | நிதிக்கூற்றுக்கள் முறையாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.3 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காசேடு, பொதுப் பேரேடு மற்றும் பரீட்சை மீதி ஆகியவை மீளாய்வாண்டில் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை. | சங்கத்தினால் வங்கிப் புத்தகம் மற்றும் பேரேடு என்பன பராமரிக்கப்படவில்லை. | சங்கத்தினால் காசேடு, பொதுப் பேரேடு மற்றும் பரீட்சை மீதி |

| | | | |
|---|---|---|---|
| | | | ஆகியவை தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சங்கத்தினால் நிலையான சொத்துப் பதிவேடொன்று பராமரிக்கப்படவில்லை. | சொத்துப் பதிவேடொன்று பராமரிக்கப்படுவதுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சங்கத்தினால் நிலையான சொத்துப் பதிவேடொன்று முறையாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டிற்கான சங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் 2023 மார்ச் 30 அன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒரு மாத தாமதத்துடன் சமர்ப்பிக்கப்படடிருந்தது. | சங்கத்தினால் 2023 மார்ச் 30 அன்று நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் தாமதமின்றி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சங்கத்தினால் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீடு என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீடு என்பன சங்கத்தினால் தயாரிக்கப்படவில்லை. | முறையான செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீடு என்பன சங்கத்தினால் தயாரிக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 969,777 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 311,893 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 657,884 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. மொத்தச் செலவுகள் ரூபா 1,424,032. ஆல் அதிகரித்தமை இப்பின்னடைவிற்கு காரணமாக இருந்தது.